**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**
**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2026–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27ஆம் நாள் திங்கட்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056 பராபவ வருடம் ஆடி மாதம் 11ஆம் நாள்**
**அசல் வழக்கு எண்.101/2025**
[CNR.No.TNDG190002782025]

S.ராஜேஸ்வரி .... வாதி

/ எதிராக /

K.சண்முகநாதன் .... பிரதிவாதி

இவ்வழக்கு கடந்த 02.06.2025 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 05.06.2025ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என்முன்பாக கடந்த 23.07.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.எம்.சதீஸ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.அ.ரியாஸ்கான் அவர்கள் முன்னிலையாகியும், வா.சா.1 என்பவரை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா உள்ள நிலையில், பிரதிவாதி அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தினால் கடந்த 21.04.2026ஆம் தேதியில் ஒருதலைபட்சநிலைக்கு உட்படுத்தப்பட்டும், வழக்குரை, சான்றாவணங்கள், வழக்குகோப்பு ஆகியவைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டும், வாதி தரப்பு வழக்குரைஞரின் வாதுரை கேட்கப்பட்டும், நாளதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீ ர் ப் பு ரை**

**1.** அசல் வழக்கானது காசோலையின்பேரில் தாவா தொகை, பின்வட்டி மற்றும் செலவுதொகை வேண்டி வாதியால் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

**2. வாதி தாக்கல் செய்த வழக்குரை சுருக்கம் :**

வாதியும் பிரதிவாதியும் நண்பர்கள். அதனடிப்படையில் வாதியிடம், பிரதிவாதி அவரது அவசர நிமித்தம் குடும்ப செலவிற்காகவும், சில்லரை கடன்களை

தீர்ப்பதற்காகவும் கடந்த 02.03.2025ஆம் தேதி கடனாக ரொக்கம் ரூ.5,00,000/– பெற்றுக்கொண்டு, அன்றே அக்கடனுக்கு ஆதரவாக பிரதிவாதி கணக்கு வைத்திருக்கும் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, ஒட்டன்சத்திரம், பாச்சலூர் கிளையின் காசோலை எண்.044551 ஒன்றை ரூ.5,00,000/–க்கு வாதி பெயருக்கு 02.04.2025 என பின் தேதியிட்டு பூர்த்தி செய்து கொடுத்துள்ளார். வாதி தனது வங்கி கணக்குள்ள கரூர் வைசியா வங்கி, ஒட்டன்சத்திரம் கிளையில் வசூலுக்காக காசோலையை கடந்த 02.04.2025ம் தேதியில் தாக்கல் செய்தபோது, Exceeds Arrangement என காரணம் குறிப்பிட்டு மதிப்பு மறுக்கப்பட்டு காசோலையானது கடந்த 16.04.2025ம் தேதி திருப்பப்பட்டுள்ளது. காசோலை மறுக்கப்பட்ட விபரத்தை வாதி தன் வழக்குரைஞர் வழியாக கடந்த 16.04.2025ம் தேதி பதிவஞ்சல் வழியாக அறிவிப்பு அனுப்பியுள்ளார், மேற்படி அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டு நாளது வரை காசோலை தொகையை கொடுக்காமலும், பதில் அறிவிப்பு அனுப்பாமலும் காலம் கடத்தி வந்துள்ளார். எனவே, தாவா காசோலை கடன் தொகையை வசூலிக்க வேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை சுருக்கம்:**

வாதியிடம், பிரதிவாதி அவரது அவசர நிமித்தம் குடும்ப செலவிற்காகவும், சில்லரை கடன்களை கடனாக ரொக்கம் ரூ.5,00,000/– அவரது வீட்டில் வைத்து பெற்றுக்கொண்டு, கடன் தொகைக்கு ஆதரவாக பிரதிவாதி காசோலை எண்.044551 ஒன்றை கடந்த 02.03.2025ம் தேதி வாதிக்கு கொடுத்ததாகவும், அதன் பின்னிட்டு 02.04.2025ம் தேதி காசோலையை வசூல் செய்ய கரூர் வைசியா வங்கி, ஒட்டன்சத்திரம் கிளையில் போடப்பட்டு அது Exceeds Arrangement என திருப்பப்பட்டதாகவும், தாவா காசோலை கடன் அசல் மற்றும் வட்டிக்காக நாளது தேதி வரை யாதொரு தொகையினையும் வாதிக்கு செலுத்தி வைக்கவில்லை என்றும் வாதி வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை பிரதிவாதி மறுத்துள்ளார். வாதியானர் பிரதிவாதியை எவ்வளவு காலம் தெரியும் என்றும், ரூ.5,00,000./ கடன் வழங்கும் அளவிற்கு என்ன தொழில் செய்து வருகிறார்

என்பதையும், வருமான வரி செலுத்துபவரா என்பதையும் குறிப்பிடவில்லை. பிரதிவாதி வாதிக்கு எந்தவொரு காசோலையும் கொடுக்கவில்லை. காசோலையில் போடப்பட்டுள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து இல்லை. பிரதிவாதி நல்ல மதிப்புடன் அந்தஸ்துடனும் கல்வி துறையில் பணியாற்றி வருவதால், பிரதிவாதியின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் நோக்கில் வேண்டாத நபர்களின் துர்போதனைகளை கேட்டுக்கொண்டு மனு சொதுக்களில் தவறான ஆதாயம் அடையும் நோக்கில் இந்த வழக்கில் பிரதிவாதிக்கு யாரென்றே முன் பின் அறிமுகம் இல்லாத வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே வாதி தாக்கல் செய்துள்ள வழக்கை பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** வாதி தரப்பில், வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்து, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்தும் வழக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை.

**5.** இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், வாதி வழக்குரையில் கோரியுள்ள தொகையும், பின்வட்டியும், செலவுதொகையும் வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டுமா? என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும்.

6. **பிரச்சனைக்கான தீர்வுகள்:**

**6.1.** வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்க்கும்போது, கடந்த 02.04.2025ஆம் தேதி வாதியிடம், பிரதிவாதி ரூ.5,00,000/– தொகையை பெற்றுக்கொண்டு காசோலையை எழுதிக் கொடுத்துள்ளது வா.சா.ஆ.1 ஆவணத்தின் வழியாக அறிய முடிகிறது.

**6.2.** வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள 044551 என்ற ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, ஒட்டன்சத்திரம் கிளை வங்கி காசோலையான வா.சா.ஆ.1 ஆவணத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்துபார்க்கும்போது, கடந்த 02.04.2025 தேதியில் வாதியின் பெயருக்கு ரூ.5,00,000/– தொகைக்கு பிரதிவாதி

கொடுக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. மேற்படி காசோலையானது வசூலுக்காக தாக்கல் செய்து, போதுமான , Exceeds Arrangement என காரணம் குறிப்பிட்டு மதிப்பு மறுக்கப்பட்டு காசோலையானது திருப்பப்பட்டிருப்பது வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களின் வழியாக அறிய முடிகிறது. வா.சா.ஆ.1 காசோலையின்படி வாதியிடம், பிரதிவாதி ரூ.5,00,000/−தொகையை கடனாக பெற்றுள்ளது வா.சா.1 என்பவரின் சாட்சியத்தின் வழியாக அறிய முடிகிறது. வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள வா.சா.1 சாட்சியத்தின் வழியாகவும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களின் வழியாகவும், வாதி தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. வாதி, பிரதிவாதிகளை அணுகி தொகை செலுத்தும்படி கேட்டுள்ளது வா.சா.1 என்பவரின் சாட்சியத்திலிருந்தும், வா.சா.ஆ.4 ஆவணத்தின் வழியாகவும் மிகத்தெளிவாகிறது. வா.சா.1 சாட்சியத்தின் வழியாக இவ்வழக்கிற்கான வழக்குமூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**6.3.** வாதி வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை பிரதிவாதி தரப்பில் மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளபோதும், எதிர்வழக்குரை சங்கதிகளை நிரூபணம் செய்யும்பொருட்டு, வாதியை குறுக்கு விசாரணை செய்ய பிரதிவாதி நீதிமன்றத்தில் முன்னிலையாகாமல் ஒருதலைபட்ச நிலைக்குட்படுத்தப்பட்டுள்ளார். வாதிக்கு வா.சா.ஆ.1 காசோலை தொகை பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால் வட்டியை பொறுத்து வாதி கணக்கிட்டுள்ளதை ஏற்றுக்கொள்வதே சரியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. வாதி தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் வழியாக வாதி தரப்பு வழக்கானது நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், வழக்குரை தொகை ரூ.5,15,000/− தொகையினையும், அசல் தொகை ரூ.5,00,000/−த்திற்கு வழக்கு தாக்கல் செய்த நாள்முதல் தீர்ப்பாணை நாள்வரை உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 34ன்கீழாக ஆண்டொன்றுக்கு 9% வட்டியும், தீர்ப்பாணை நாள்முதல் தொகை வசூலாகும் நாள்வரை ஆண்டொன்றுக்கு 6% வட்டியும், வழக்கின் செலவு தொகையும் வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று தீர்மானிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

7. **முடிவில்,**

1. **வாதியின் வழக்கு செலவுதொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**
2. **வழக்குரை தொகை ரூ.5,15,000/- தொகையினையும், அசல்தொகை ரூ.5,00,000/-தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த நாள்முதல் தீர்ப்பாணை நாள்வரை ஆண்டொன்றுக்கு 9% வட்டியும், தீர்ப்பாணை நாள்முதல் தொகை வசூலாகும் நாள்வரை ஆண்டொன்றுக்கு 6% வட்டியும், வழக்கின் செலவுதொகையும் வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27ஆம் நாள் அவையறிய திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது.

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.07.27 19:05:47 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**

**வாதி தரப்பு சாட்சிகள் :**

வா.சா.1 – ராஜேஸ்வரி வாதி

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | 02.04.2025 | பிரதிவாதி, வாதிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் காசோலை – அசல் | வா.சா.ஆ.1 |
| 2 | 02.04.2025 | காசோலையை வங்கியில் தொகை வசூல் செய்ய செலுத்தியதற்கான ரசீது அசல் | வா.சா.ஆ.2 |
| 3 | 03.04.2025 | காசோலை திருப்பப்பட்டதற்கான வங்கி குறிப்பாணை – அசல் | வா.சா.ஆ.3 |
| 4 | 16.04.2025 | வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்குரைஞர் அறிவிப்பு அலுவலக நகல் | வா.சா.ஆ.5 |
| 5 | | வாதி அறிவிப்பை பிரதிவாதிக்கு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது – அசல் | வா.சா.ஆ.5 |

**பிரதிவாதி தரப்பு சாட்சி** : இல்லை

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.07.27 19:05:54 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**